DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.8**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சந்தன முருகேசன் |
| Father Name | : | கருப்பையா |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.03.2025.

(2வது எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது 24C1, DRO காலனி குடியிருப்பில் குடியிருக்கிறேன். நான் தற்போது வடக்கு மதுரை கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் தல்லாகுளம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். அந்த சமயத்தில் எங்களுக்கு முத்துமொழி என்பவர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தார். கடந்த 22.11.2015ம் தேதி காவல்துறை சார்பு ஆய்வாளர் சகாய பிரவீன் என்பவரை நாங்களை கைது செய்ய வந்துள்ளோம், வருமாறு போன் மூலம் அழைத்தார். பின்னர் என்னை கே.புதூர், சம்பக்குளம் பிரிவு, 120 அடி ரோடு மயானம் அருகில் அழைத்து சென்றார்கள். 2வது எதிரி மாரிமுத்து போலிசாரை கண்டதும் மயான சுவரின் மீது ஏறி குதித்தார். அவரை போலிஸ் பிடித்தனர். 2ம் எதிரியிடமிருந்து போலிசார் வெள்ளை நிற நோக்கியா போனை கைப்பற்றினார்கள். பின்னர் TN 59 BE 1830 என்ற கருப்பு யானை கலர் Honda இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிரி சகாய பிரவீனை உதவி ஆய்வாளர் காவல்

நிலையத்திலிருந்து அழைத்து வந்தார். 1ம் எதிரி வழக்கு சம்பவம் குறித்தும், வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை வண்டியூர் பிரிவு, பழைய மோட்டார் ரூமில் புதைத்து வைத்திருப்பதாக சொன்னார். அங்கு சென்று போலிசார் என் முன்னிலையிலும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையிலும் ஒரு கத்தியை கைப்பற்றினார்கள். அந்த கத்தி என்னிடம் காட்டப்படுவது தான், அந்த கத்தி **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் உறை **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வெள்ளை கலர் நோக்கியா செல்போன் **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி TN 59 BE 1830 என்ற கருப்பு கலர் Honda இருசக்கர வாகனம் **சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சியில் கண்டுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது நானும் கிராம நிர்வாக அலுவலர் முத்துமொழி என்பவரும் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது 22.11.2015ம் தேதி கோ.புதூர் காவல் நிலைய ஆய்வாளர் புதூர் காவல் நிலைய குற்ற எண்.1017/2015 பிரிவுகள் 341, 294(b), 307 IPC வழக்கில் பிரவீன் என்ற

சகாய பிரவீன் என்பவரை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற சாட்சியாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் 120 அடி ரோடு, சம்பக்குளம் ரோடு சந்திப்பு அருகே வந்த போது அங்கு ஏற்கனவே போலிசாருடன் இருந்த சகாய பிரவீன் என்பவர் யாருடைய அச்சுறுத்தலோ ஆசை வார்த்தையோ இல்லாமல் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், காவல் ஆய்வாளர் அதை பதிவு செய்தார் என்றும், அதே இடத்தில் மாரிமுத்து என்பவர் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறியதால் மாரிமுத்துவையும் காவல் ஆய்வாளர் கைது செய்தார் என்றும், எதிரி ஆஜர் செய்த வெள்ளை நிற நோக்கியா செல்போன் மற்றும் TN 59 BE 1830 என்ற இருசக்கர வாகனத்தையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், பின்பு எதிரிகள் இருவரும் சம்பவத்திற்கு பயன்படுத்தி மறைத்து வைத்திருந்த கத்தியை மதுரை ரிங் ரோடு வண்டியூர் பிரிவில் பழைய மோட்டார் ரூமிற்கு அழைத்து சென்று அங்கு அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் அதை கைப்பற்றினார் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1, 2, 3 மற்றும் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

1ம் எதிரியை காவல் நிலையத்திலிருந்து போலிசார் அழைத்து வந்தார்கள், அவர் ஆய்வாளரா அல்லது உதவி ஆய்வாளரா என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரியை எப்போது காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து அங்கே வைத்திருந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. செல்போனையும் பைக்கையும் கைப்பற்றியதற்காக தயார் செய்த அத்தாட்சியில் எதிரி மாரிமுத்துவும் கையொப்பம் செய்தார் என்றால் அவர் கையொப்பம் போடவில்லை. நானும் கிராம நிர்வாக அலுவலரும் எழுதிய வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்தோம். மொத்தம் இரண்டு ஆவணங்களில் நானும் முத்துமொழி என்பவரும் கையொப்பம் செய்தோம். சம்பவ சமயத்தில் எங்கள் கிராம நிர்வாக அலுவலகம் புதூரில் அல் அமீன் பள்ளி அருகில் இருந்தது. நான் மேற்படி அலுவலகத்தில்

இருந்த போது தான் போனில் என்னை அழைத்தார்கள். மேற்படி எங்கள் அலுவலகத்திற்கும் புதூர் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் ஒரு கி.மீ தொலைவு இருக்கும். கே.புதூர், சம்பக்குளம், 120 அடி ரோடு புதூர் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் ஒன்றரை கி.மீ தூரம் இருக்கும். எங்களை எங்கள் அலுவலத்திலிருந்து காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அழைக்கவில்லை. நேரடியாக சம்பக்குளம் ரோடு சந்திப்பிற்கு வரச்சொன்னார்கள். நாங்கள் சம்பக்குளம் ரோடு சந்திப்பிற்கு சென்ற போது, உதவி ஆய்வாளர் அங்கிருந்தார். அவர் அங்கு எப்போது சென்றார் என்று எனக்கு தெரியாது. சம்பக்குளம் ரோடு சந்திப்பிலிருந்து கருப்பாயூரணி ரிங் ரோடு வண்டியூர் சந்திப்பு சுமார் இரண்டு கி.மீ தொலைவு இருக்கும். அ.சா.ஆ.6 ல் கைப்பற்றப்பட்ட இடம், நாள், நேரம் என்ற பகுதியில் எழுதப்பட்ட வாசகத்தின் முதலில் எழுதப்பட்ட தேதியை யார் திருத்தம் செய்தார் என்று கேட்டால் சார்பு ஆய்வாளர் திருத்தம் செய்திருப்பார். அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 அடங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் தட்டச்சு செய்து கொண்டு வந்தார்கள், அவர்கள் எங்கு வைத்து தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது, நான் அந்த ஆவணத்தில் முதலில் 120 அடி ரோடு சம்பக்குளம் மயானம் அருகில் வைத்தும் மற்றும் வண்டியூர் சந்திப்பு பழைய மோட்டார் ரூம் அருகில் வைத்தும் கையொப்பம் செய்தேன். நான் ஒரு இருசக்கர வாகனத்திலும் கிராம நிர்வாக அலுவலர் ஒரு இருசக்கர வாகனத்திலும் தனித்தனியாக சென்றோம். எங்கள் கிராம எல்லைக்குள் ஒரு குற்றச்சம்பவம் நடந்தால், அதன் புலன் விசாரணைக்கு சட்டப்படியாக காவல்துறைக்கு உதவியாக இருப்போம். இந்த வழக்கு சம்பவ தினத்தன்று இந்த வழக்கு குறித்து எங்களுக்கு தகவல் காவல்துறையிலிருந்து சொன்னார்களா என்றால் சொன்னார்கள். எங்களை 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரி வீட்டிற்கு உதவி ஆய்வாளர் அழைத்து சென்றார். வண்டியூர் ரிங் ரோடு மோட்டார் ரூம் யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தின் உரிமையாளரை போலிசார் அழைத்து வரவில்லை. நான் சொன்ன மாதிரி

சொன்ன தேதியில் போலிசார் எங்களை அழைக்கவில்லை என்றும், நான் குறிப்பிடுவது போல் எந்த இடத்திற்கும் செல்லவில்லை என்றால்சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் புதூர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு, அங்கு வைத்து மேற்படி ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அது போல் சான்றுபொருட்களும் நான் சொன்ன முறையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சான்றுபொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்களில் எதிரி மாரிமுத்துவின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை.